06.01.2020 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டம்

மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 14 வது மத்திய நிதிக்குழு பரிந்துரையில் கிடைக்க பெறும் நிதியில் கீழ்க்கண்ட தார்ச் சாலைகள் புதுப்பிக்கும் பணி ரூ. 74.68 லட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பம்புஹவுஸ் ரோடு (கே.சி.ரோடு முதல் பம்பு ஹவுஸ் வரை) மற்றும் முத்தழகியம்மன் கோவில் தெருவில் தார்தளம் புதுப்பித்தல் | 35.00 |
| 2. | சேர்வைக்காரன் புது தெருவில் தார்தளம் புதுப்பித்தல் | 14.00 |
| 3. | ரஹிம் நகர் சாலை மற்றும் அண்ணா நகர் முதல் தெரு தார்தளம் புதுப்பித்தல் | 25.68 |
| | மொத்தம் | 74.68 |

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 241 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சி சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 8-வது மாநில உயர்மட்ட குழு பரிந்துரை திட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டு தற்போது துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் டாடா இலகு ரக வாகனங்கள் TN 76 AM 3463 மற்றும் TN 76 AM 3422 ஆகிய வாகனங்களை முதல் சேவை (First Service) செய்ய வேண்டியிருப்பதால், மேற்படி டாடா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட சேவை மையம் S.V.Auto Service Centre, 30, அம்பை மெயின் ரோடு, தென்காசி என்ற நிறுவனம் மூலம் முதல் சேவை (First Service) மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3950 மற்றும் ரூ.4000/- ஆக மொத்தம் ரூ.7,950/-ஐ நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு..

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 242 அனுமதிக்கப்பட்டது**

மன்றப்பொருள்**..3**

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள சுகாதார பணியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் சுகாதார பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கு 2019–2020 ஆண்டிற்கு சீருடைகள் ஆகியவைகளை அரசு நிறுவனமான கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கும், அதற்குரிய தையல் கூலி வழங்குவதற்கும் உத்தேச

செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 243 அனுமதிக்கப்பட்டது**

30.01.2020 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டம்

மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 14 மத்திய நிதிக்குழுத் திட்டத்தில் கீழ்க்காணும் சாலையில் தார் தளம் அமைக்கும் பணிக்கு, நகர்மன்ற தீர்மானம் எண். 201 நாள் 06.01.2020 ல் அனுமதி வழங்கப்பட்டு, உரிய தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 10.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 28.01.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்)</th><th>ஒப்பந்தக்காரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">பம்புஹவுஸ் சாலை (கே.சி.ரோடு முதல் பம்பு ஹவுஸ் வரை) மற்றும் முத்தழகி அம்மன் கோவில் தெருவிலும் தார்தளம் அமைத்தல்</td><td rowspan="2">ரூ. 35.00</td><td>திரு.எம்.முருகன்</td><td>4.06 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>திருமதி.எம்.லெட்சுமி</td><td>7.00 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">வார்டு 18 ரஹீம் நகர் பகுதி மற்றும் வார்டு 17 அண்ணா நகர் சாலையிலும் தார்தளம் அமைத்தல்</td><td rowspan="2">ரூ.25.68</td><td>திரு.சின்னராமசிவன்</td><td>3.28 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>திரு.ஆறுமுகம்</td><td>6.62 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">சேர்வைகாரன் புதுத் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி</td><td rowspan="2">ரூ. 14.00</td><td>திரு.சின்னராமசிவன்</td><td>4.52 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>திரு.ஆறுமுகம்</td><td>6.33 சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

மேற்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு கூடுதலாக விலைவிகிதம் குறிப்பிட்டுள்ளதால், இந்நகராட்சி அலுவலகத்திலிருந்து ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்பு செய்ய (Negotiation) அறிவிப்பு கடிதம் 28.01.2020 அன்று வழங்கப்பட்டது. ஒப்பந்தக்காரர்கள் தங்களின் கடிதங்களில் விலைகுறைப்பு செய்ய இயலாது

என தெரிவித்துள்ளார்கள் எனவே, மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு..

1.அரசின் சீரிய திட்டம் என்பதாலும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணியினை குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், வ.எண்.1 காணும் பணிக்காக வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்சமாகவும், மதிப்பீட்டு விலைவிகித்திற்கு 4.06 சதவிகிதம் அதிகமாகவும் வழங்கியுள்ள திரு.எம்.முருகன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினையும், வ.எண்.2 காணும் பணிக்காக வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தப்டசமாகவும், மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு 3.28 சதவிகிதம் அதிகமாகவும் வழங்கியுள்ள திரு. சின்னராமசிவன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினையும், வ.எண்.3ல் காணும் பணிக்காக, வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்சமாகவும், மதிப்பீட்டு விலைவிகித்திற்கு 4.52 சதவிகிதம் அதிகமாகவும் வழங்கியுள்ள திரு. சின்னராமசிவன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினையும், தமிழ்நாடு பொறியியல் கையேடு சேப்டர் 2, பிரிவு 2.7.2ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. இதற்கான கூடுதல் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
தீர்மானம் எண். 204 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..2

இந்நகராட்சியில், வருமானவரி GST மற்றும் டெண்டர் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும், பதிவிறக்கம் செய்வதற்கும் DIGITAL SIGNATURE CARD ஒன்று வாங்கிடவும், அதற்கான செலவிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

செலவினத் தொகை ரூ. 5000/- மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண். 205 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..3

இந்நகராட்சி 2018-2019ஆம் ஆண்டுக்கான தணிக்கை முடிவு பெற்றுள்ளதால், தணிக்கை அறிக்கைகளை தட்டச்சு செய்து அதனை புத்தக பைண்டிங் வருவாய் மற்றும் மூலதனநிதி மற்றும் குடிநீர் நிதி என தனிதனியாக பைண்டிங் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பி வைக்க இந்நகராட்சியில் தட்டச்சர் பணியிடமானது காலியாக உள்ளபடியால் மேற்படி பணியினை வெளிசந்தை மூலமாக மேற்கொள்ள குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டு, பெறப்பட்டது. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள க்யூடெல் கம்யூட்டர்ஸ் நிறுவன விலைப்புள்ளி விலைக்கு அனுமதி பெற்று பணிகளை மேற்கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பும் செலவினத் தொகை ரூ. 15,800/-ஐ வருவாய் மற்றும் மூலதன நிதி மூலமாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு..

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 98/2019/பி1)

தீர்மானம் எண். 206 அனுமதி வழங்கப்பட்டது.